மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இதைப் பற்றி மிக ஆவலாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நடப்பது நடக்கட்டும். அதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்.

(இ) உறுப்பினர் கொடுத்த அறிவிப்புகள் குறித்து

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, நாங்கள் ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தோம். அதைத் கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றி இருக்கிறீர்கள். சீதாலட்சுமி கல்லூரி, பள்ளத்தூர், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி, நாமக்கல் கல்லூரி ஆகியவற்றில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கொடுத்த தீர்மானம் என்னவாயிற்று என்றுதான் கேட்க வேண்டுமே தவிர அதன் விவரங்களைச் சொல்லக் கூடாது. ஆகவே இந்தப் பிரச்சினை சனிக்கிழமை இங்கே எழுப்பப்படலாம். அநேகமாக வந்தாலும் வரலாம், அந்த நம்பிக்கையோடு அவர்கள் அமரலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

3. ஒழுங்குப் பிரச்சினைகள்

அரசியலமைப்பு 45வது திருத்தச் சட்டம் எடுத்துக் கொள்ளப் பெறவேண்டுமென்பது குறித்து

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, நம்முடைய பேரவைவிதி 13(2)-ன்படி 'அரசின்சட்டமுன்வடிவு அல்லது அரசின் பிற அலுவல்களை விவாதிக்க வேண்டுமென்று கொண்டு வரப் பெறும் தீர்மானத்திற்கிணங்க உரையின் மீதான விவாதம் தள்ளி வைக்கப்பெறலாம்'' என்று சொல்லப்பட்டு இருக்கிறது. நான் ஆளுநர் உரை மீதான விவாதம் தள்ளிவைக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் கொடுத்து இருக்கிறேன் அதற்கு உங்களுடைய அனுமதி கோருவதற்கு முன்பு ஒரு பிரச்சினை இருக்கிறது. விவாதத்திற்கு ஒரு பிரச்சினை இந்தக் கூட்டத் தொடரில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமானால், அது குறித்து தனி நபர் தீர்மானம் கொடுக்கத் தேவையில்லை. உங்களுக்குத் தெரியும், இப்போது "ரிசர்வேஷன் ஆப் சீட்ஸ் பார் ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ் அண்டு ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ்'' ஒரு சட்டம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதியில் என்ன சொல்லப் பட்டு இருக்கிறது என்பதை மட்டும் சொல்லுங்கள். பொருளுக்குள் போக வேண்டாம். பொருள் குறித்த விவாதம் அவசியம் இல்லை.